சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – நெடுஞ்சாலைத் துறை – கருணை அடிப்படையில் பணி நியமனம் – காலஞ் சென்ற அரசு ஊழியர் திரு.ஜி.சண்முகம் என்பவரின் மகள் திருமதி.எஸ்.புவனேஸ்வரி என்பவர் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் – பணிவரன்முறை – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலைகள் (ம) சிறு துறைமுகங்கள் (எச்.எம்.1) துறை

அரசாணை (2டி) எண். 47

நாள்: 03.11.2023
சோபகிருது, ஐப்பசி 17,
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத்(க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத்(க்யூ.1) துறை, நாள் 26.02.2021.
3. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை அவர்களின் கடித எண்.49780/நிர்7/2003, நாள் 09.11.2022 மற்றும் 23.12.2023.

----------

ஆணை:–

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மை இயக்குநர் நெடுஞ்சாலைத்துறை அவர்கள் நெடுஞ்சாலைத் துறையில் செங்கல்பட்டு (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்ட அலுவலகத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு.ஜி.சண்முகம் என்பவர் பணியிடையே காலமானதையடுத்து மறைந்த அரசு ஊழியரின் மகள் திருமதி.எஸ்.புவனேஸ்வரி அவர்கள் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கக்கோரி அளித்த விண்ணப்பம் உரிய வழிமுறையில் பெறப்பட்டது என்றும் அதன்பேரில் தனியரது வயது, கல்வித்தகுதி மற்றும் தேவைப்படும் அனைத்து சான்றுகளும் அசலாக சரிபார்க்கப்பட்டது என்றும் தனியர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி மற்றும் வயது குறித்த தகுதிகளை நிறைவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் தனியரது குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் துறையில் பணி புரியவில்லை என்பதற்கும் அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்பதற்கான சான்றுகளையும் மற்றும் அவரது பணி வரன்முறைக்கு தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றுகளையும் அரசுக்கு நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் சமர்ப்பித்துள்ளார். முதன்மை இயக்குநர் (நெ) அவர்களின் 29.12.2020 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி தனியருக்கு இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது.